**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : C.C. 44 /2008

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 1

Defence

Court

Name : திரு.A.ஜெயகுமார்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.3.2018

முதல்விசாரணை

நான் தற்போது சி.2 சுப்பிரமணியபுரம் கு.பி.காவல்நிலையம் மதுரை மாநகரில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 6.7.2007 ம் வருடம் தேனி என்ஐபிசிஐடியில் தலைமைகாவலராக பணி செய்த போது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த தகவல் பேரில் நான், த.கா.2308, 1824, 1430,694 மற்றும் தகவலாளியுடன் ஆய்வாளர் அவர்களின் நேரடி பார்வையில் தக்க உபகரணங்களுடன் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக 7.30 மணிக்கு புறப்பட்டு 8.00 மணிக்கு உத்தமபாளையம் பேரூந்து நிலையம் சென்று அங்கிருந்த சென்றாயன் த-பெ பவுன்தேவர், பாலூத்து கடமலைகுண்டு என்பவரை தனிநபர் சாட்சியாக அழைத்துக்கொண்டு உத்தமபாளையம் ரோடு, கோஜேந்திபுரம்ஓடை பாலம் அருகில் போதைப்பொருள் சம்பந்தமாக கண்காணித்துக்கொண்டிருந்த போது 9.00 மணிக்கு தகவலாளி சுட்டிக்காட்டிய திசையில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த அருள் த-பெ பெருமாள், ஆத்துார், சேலம் மாவட்டம், தியாகராஜன் த-பெ அழகப்பன் படையாச்சி,

வாழப்பாடி, சேலம் மாவட்டம், கந்தசாமி த-பெ பொம்மன் ஆத்தூர் சேலம் மாவட்டம் ஆகியோர்களிடம் நாங்கள் என்ஐபி சிஐடி போலீசார் என்று அடையாள அட்டையை காட்டி அறிமுகம் செய்து உங்களிடம் அபின் என்ற போதைப்பொருள் இருப்பதாக தகவல் உள்ளது. உங்களை சோதனை செய்ய வேண்டும். நீங்கள் விரும்பினால் அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரி முன்போ செல்ல உரிமையுள்ளது என்று எடுத்துக்கூறிய போது அவர்கள் வேண்டாம் என்றும் நீங்களே சோதனை செய்தால் போதும் என்று கூறினார்கள். அதன் பேரில் அருள், தியாகராஜன், கந்தசாமி ஆகியோர்களிடம் சோதனை சம்மத கடிதம், ஆய்வு நமூனா எழுதி வாங்கினோம். அந்த சோதனை சம்மத கடிதங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரை. மேற்படி நபர்களுக்கான ஆய்வு நமூனாக்கள் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.6 வரை. மேற்படி நபர்களை சோதனை செய்ய அவர்கள் பாக்கெட்டில் இருந்து பிளாஸ்டிக் கவருடன் கூடிய பொட்டலங்கள் மூன்றை ஆஜர் செய்தனர். அவற்றை நாங்கள் கொண்டு சென்ற கிட் பாக்ஸ் மூலம் சார்பு ஆய்வாளர் சோதனை செய்த போது அது அபின் என்று தெரிய வந்தது. ஒவ்வொரு பொட்டலத்திலும் 100 கிராம் இருந்தது. அதன் மதிப்பு சுமார் ஆறு இலட்சம் ஆகும். அதிலிருந்து ஒவ்வொரு பொட்டலத்தில் இருந்து மாதிரிக்காகவும் ரசாயன பரிசோதனைக்காகவும் தலா இரண்டு மாதிரிகள் எடுக்கப்பட்டு மொத்தம் 6 பொட்டலங்கள் ஒவ்வொன்றும் தலா 5 கிராம் எடையிருந்ததை ஆறு பிளாஸ்டிக் கவர்களில் போட்டு அவற்றை காக்கி கவரால் மடித்து என்ஐபி சீல் வைத்து எஸ்.1 முதல் எஸ்.6 வரை குறியீடு செய்தோம். மீதமுள்ள அபினை அதே பிளாஸ்டிக் கவர்களில் வைத்து காக்கி கவரில் வைத்து கட்டி பி.1 முதல் பி.3 என குறியீடு செய்து என்ஐபி சீல் வைக்கப்பட்டது. பின்பு சார்பு ஆய்வாளர் எதிரிகளிடம் அபின் வைத்திருக்க எவ்வித அனுமதியும் உரிமமும் இல்லாததால் 9.30 மணிக்கு கைது செய்து 9.30 மணி முதல் 10.30 மணி வரையிலும் அத்தாட்சி மூலம் மேற்படி பொருட்களை கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ. 7 ஆகும். அத்தாட்சியில் நானும் சென்றாயன் மற்றும் எதிரிகளும் கையொப்பம் செய்தோம். பின்பு எதிரிகள் மூவரிடமும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் 10.30 மணி முதல் 12.00 வரை சார்பு ஆய்வாளர் பெற்றார். பின்பு எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்ன தகவலின் பேரில் கம்பம் மெட்டு அடிவாரத்தில் பாலத்தின் அருகில் 13.00 மணிக்கு எதிரிகள் அடையாளம் காட்டிய பழனியப்பன், த-பெ சுப்புராய கவுண்டர் ஆத்தூர் சேலம் மாவட்டம், அழகேசன் த-பெ துரைசாமி சேலம் மாவட்டம் ஆகியோர்களை பிடித்து என்ஐபி போலீசார் என்று அறிமுகம் செய்து அடையாள அட்டை காண்பித்து அவர்களை சோதனை செய்ய அவர்களுக்கு உள்ள உரிமையை எடுத்துக்கூறிய போது அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன்

பேரில் சோதனை சம்மத கடிதம் மற்றும் ஆய்வு நமூனா எழுதி வாங்கினோம். பழனியப்பன் என்பவரிடம் இருந்து பெறப்பட்ட சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.8. அழகேசன் என்பவரிடம் இருந்து பெறப்பட்ட சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.9. பழனியப்பன் என்பவரிடம் இருந்து பெறப்பட்ட ஆய்வு நமூனா அ.சா.ஆ.10. அழகேசன் என்பவரிடம் இருந்து பெறப்பட்ட ஆய்வு நமூனா அ.சா.ஆ.11 ஆகும். மேற்படி நபர்களை சோதனை செய்த போது அவர்கள் கையில் வைத்திருந்த பொட்டலங்களை ஆஜர்படுத்தினார்கள். அவற்றை கிட் பாக்ஸ் மூலம் சோதனை செய்த போது அபின் என்று தெரியவந்தது.அவற்றை எடைப்போட்டு பார்த்த போது தலா 500 கிராம் இருந்தது. அவற்றின் மதிப்பு ரூபாய் இருபது இலட்சம் ஆகும். அதிலிருந்து மாதிரிக்காகவும் ரசாயன பரிசோதனைக்காகவும் தலா 5 கிராம் வீதம் 4 மாதிரிகள் எடுத்து பிளாஸ்டிக் கவர்களில் எடுத்து காக்கி நிற கவரில் சுற்றி என்ஐபி சீல் வைக்கப்பட்டு எஸ்.7 முதல் எஸ்.10 வரை குறியீடு செய்யப்பட்டது. மீதமுள்ள அபினை அதே பிளாஸ்டிக் கவர்களில் வைத்து காக்கி நிற கவரில் சுற்றி பி.4 பி.5 என குறியீடு செய்யப்பட்டு என்ஐபி சீல் வைக்கப்பட்டது. 13.30 மணிக்கு மேற்படி எதிரிகளை கைது செய்து பிறகு சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து 13.30 முதல் 14.30 வரை மேற்படி சொத்துக்களை கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.12 ஆகும். அந்த அத்தாட்சியில் நானும் சென்றாயன் மற்றும் எதிரிகளும் கையெழுத்து போட்டோம். எதிரிகளை விசாரணை செய்து 14.30 முதல் 15.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். பழனியப்பன் மற்றும் அழகேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி அபினை ராஜஸ்தான் மாநிலம் டோங்கார் கிராமத்தில் ஜெயராமன் என்பவரிடம் இருந்து 1.300 கிலோகிராம் வாங்கி வந்ததாகவும் அவற்றில் 300 கிராமை 100, 100 ஆக பிரித்து அருள், தியாகரகாஜன், கந்தசாமி ஆகியோர்களிடம் கொடுத்து உத்தமபாளையம், கம்பம் ஆகிய பகுதிகளில் வியாபாரிகளிடம் மாதிரிகளை காட்டி வரச்சொல்லி அனுப்பியதாகவும் மீதமுள்ள ஒரு கிலோவை இருவரும் தலா 500 கிராம் வீதம் பிரித்து வைத்திருந்ததாகவும் கூறினார்கள். எதிரிகளுக்கு அவர்களை கைது செய்வதற்கு முன்பு தனித்தனியாக காரணத்தை தெரிவிக்கும் நமூனா தயார் செய்தோம். அவை அ.சா.ஆ.13 முதல் அ.சா.ஆ.17 ஆகும். அந்த எதிரிகளின் கைது பற்றி அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து 18.00 மணிக்கு என்ஐபி சிஐடி நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

காலை 7.00 மணிக்கு ரோந்து போவது சம்பந்தமாக எனக்கு தெரியவந்தது. சார்பு ஆய்வாளர் சொல்லி தான் ரோந்து போகும் தகவல் பற்றி எனக்கு தெரியும். இதற்கு

முன்பாக மேற்படி சம்பவ இடங்களுக்கு ரோந்துக்காக போய் இருக்கிறோம். உத்தமபாளையம் போகும் வரையிலும் நாங்கள் யாரையும் எங்களுடன் சாட்சிக்காக கூட்டி போகவில்லை. எந்த வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை. உத்தமபாளையம் போகும் போது மணி சுமார் 8.00 மணி இருக்கும். உத்தமபாளையம் பஸ்ஸ்டாண்டில் வைத்து தான் கூட்டிப் போனோம். சார்பு ஆய்வாளர் தான் அவரை சாட்சிக்கு வரும்படி அழைத்தார். அவருடன் நாங்கள் வேறு யாரையும் கூட்டி போகவில்லை என்று சொன்னால் நாங்கள் கூப்பிட்டோம். யாரும் வரவில்லை. வராதவர்களின் பெயர் முகவரி எதுவும் பெறவில்லை. நான் போய் யாரையும் தனிநபர் சாட்சியாக இருக்கும்படி கூப்பிடவில்லை. உத்தமபாளையம் பஸ்ஸ்டாண்டு அருகில் நிரந்தரமான கடைகளும் வீடுகளும் உள்ளன என்றால் சரிதான். நிரந்தரமாக அங்கு இருப்பவர்கள் யாரும் சாட்சியாக கூப்பிட்டு வரவில்லை. கோஜேந்திர ஓடை சென்று சேரும் போது 8.15 முதல் 8.30 மணி இருக்கும். கோஜேந்திர ஓடை பாலம் கிழக்கு மேற்காக உள்ளது. மேற்படி ஓடை பாலத்திற்கு 100 அடி துாரத்தில் இருந்து கண்காணித்தோம். ஆனால் எந்த திசையில் இருந்து கண்காணித்தோம் என்று ஞாபகம் இல்லை. நாங்கள் தகவலாளியுடன் சேர்த்து 7 பேர் போனோம். உத்தமபாளையத்தில் இருந்து கோஜேந்திர ஓடைக்கு எந்த எந்த ஊர்களை தாண்டி போனோம் என்று ஞாபகம் இல்லை. உத்தமபாளையம்-கம்பம் ரோடு தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த ரோட்டில் எப்போதும் வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் சரிதான். எதிரிகள் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்துக் கொண்டிருந்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. ஆவணங்களிலும் குறிப்பிடவில்லை. சோதனை சம்மத கடிதத்தை சார்பு ஆய்வாளர் தான் எழுதினார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 ஆவணங்கள் 9.00 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 முதல் 3 ஒரே கைப்பட எழுதப்பட்ட கடிதம் என்றால் சரிதான். எதிரிகளை தனித்தனியாகத்தான் சோதனை செய்தோம். அபினை தவிர வேறு சட்டவிரோதமாக பொருட்கள் எதுவும் அவர்களிடம் இருந்து பெறப்படவில்லை. அவர்களிடம் இருந்து பஸ் டிக்கெட், பணம் செல்போன் எதுவும் கைப்பற்றவில்லை. கைது செய்வதற்கான காரணத்தை தெரிவிக்கும் நமூனாவை சார்பு ஆய்வாளர் சொல்ல சொல்ல நான் எழுதினேன். முதல் சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட கைதுக்கான காரணத்தை தெரிவிக்கும் நமூனா ஒரே கையொப்பத்தில் 10.30 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். கிட் பாக்சில் வைத்து பரிசோதனை செய்ய எத்தனை கிராம் அபின் எடுக்கப்பட்டது என்பது சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். மாதிரி பொட்டலங்கள் எல்லா எதிரிகளுக்கும் ஒரு பாலிதீன் கவர் அதன்

மேல் ஒரு காக்கி கவர் சுற்றி தான் கைப்பற்றப்பட்டது. அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட மாதிரிபொட்டலங்கள் மற்றும் மீதமுள்ள பொட்டலங்களும் எந்த எந்த எதிரிக்கு எந்த எந்த குறியீடு செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் என் கைப்பட எழுதவில்லை. ஒப்புதல் வாக்குமூலமும் அத்தாட்சியும் ஒரே கையெழுத்தாக உள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட அபின் கெட்டியாகவும் இல்லாமல் திரவநிலையிலும் இல்லாமல் கொழகொழப்புடன் இருந்தது. கோஜேந்திர ஓடையில் இருந்து மற்றொரு சம்பவ இடத்திற்கு எந்த எந்த ஊர்களை தாண்டி சென்றோம் என்று ஞாபகம் இல்லை. முதல் சம்பவ இடத்திற்கும் இரண்டாவது சம்பவ இடத்திற்கும் சுமார் 20 கிலோமீட்டர் துாரம் இருக்கும். கம்பம் மெட்டு மலை அடிவாரத்திற்கும் 2 வது கண்காணிப்பில் நடந்த பாலத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் ஞாபகம் இல்லை. மலை அடிவாரத்திற்கு செல்வதற்கு முன்பாக காவல்துறை செக்போஸ்ட் ஒன்று உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. கம்பம் மெட்டு அருகில் அடிவாரத்தில் உள்ள பாலம் எந்த திசையில் இருந்தது என்று ஞாபகம் இல்லை. எதிரிகளை சோதனை செய்து தான் அபினை கைப்பற்றினோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன். எதிரிகள் அபினை அவர்களின் சட்டையின் வெளி பாக்கெட்டில் அல்லது உள் பாக்கெட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. இந்த எதிரிகளிடம் இருந்தும் தனிப்பட்ட வேறு பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. வழக்கு பதிவு செய்த பிறகு தான் எதிரிகளுக்கு வரிசை எண் வழங்கப்படும் என்றால் சரிதான். பழனியப்பன் அழகேசன் ஆகியவர்களுக்கு ஒரே நேரத்தில் ஒரே நபரால் இரண்டு சோதனை சம்மத கடிதங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி இரண்டு சோதனை சம்மத கடிதங்களிலும் எ.3 முதல் எ.5 வரையுள்ளவர்கள் அடையாளம் காட்டியதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனியப்பன் அழகேசன் ஆகியவர்களுக்கான கைது செய்யும் காரணத்தை தெரிவிக்கும் நமூனா ஒரே நேரத்தில் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐந்து ஆய்வு நமூனாக்களிலும் தயார் செய்யப்பட்ட நேரம் அழித்து திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் யாருடைய சுருக்கொப்பமும் இல்லை என்றால் சரிதான். இரண்டாவது சம்பவ இடத்திலும் ஒவ்வொரு மாதிரி பொட்டலங்களும் ஒரு பாலிதீன் கவர் ஒரு காக்கி கவர் வைத்து தான் பொட்டலம் போடப்பட்டது என்றால் சரிதான். அந்த அத்தாட்சிகளில் எந்த எந்த எதிரிக்கு எந்த எந்த குறியீடு செய்யப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் உறவினர்களுக்கு நாங்கள் தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு ரோந்துக்கு போகவில்லை என்றும் தனிநபர் சாட்சிகளை

யாரையும் அழைத்து செல்லவில்லை என்றாலும் அழைத்து சென்றதாக கூறப்படும் நபர் காவல்நிலைய கையிருப்பு சாட்சி என்றாலும் எதிரிகளை சம்பவ இடங்களில் வைத்து பார்க்கவில்லை என்றாலும் அவர்களுக்கு உரிமை அறிவிப்பு வழங்கவில்லை என்றாலும் அவர்களிடம் இருந்து எந்தவிதமான போதைப்பொருளும் கைப்பற்றவில்லை அவர்களை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு உயர் அதிகாரியின் வேண்டு கோளுக்கு இணங்க அவைகளில் கையொப்பம் செய்து உண்மைக்கு புறம்பாக சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.